# செயலாக்கத் திட்டம்– 2006–2007

## ஊரக மற்றும் சிறுதொழில்கள்

## பாகம் – அ

தமிழ்நாட்டில் தொழில்களின் வளர்ச்சியை, குறிப்பாக சிறு தொழில்களின் மேம்பாட்டிற்கான கள அமைப்பாக தொழில் வணிகத்துறை விளங்குகிறது. இத்துறை மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்திற்கென பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்திட முக்கிய பணியாற்றி வருகிறது.

இத்துறை, செயல்பட்டு வரும் மற்றும் புதிதாக துவக்கப்படும் தொழில்களின் வளர்ச்சி, நவீனமயமாக்குதல், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவை சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி, தொழில் நுட்ப உதவி மற்றும் வழிகாட்டிச் சேவை புரிவது போன்ற பல்வேறு திட்டங்களை செயலாற்றி வருகிறது. மேலும், ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்திட தேவை மற்றும் பல்நோக்கு அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2. தொழில் வணிகத் துறையின் பல்வேறு செயல்பாடுகள்:–**

1. (அ) சிறுதொழில், குறுதொழில் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும் மேம்படுத்துவது.

   (ஆ) அங்கீகரிக்கப்பட்ட இணையதள மையங்கள் மூலமாக தொழில் முனைவோருக்கு தற்காலிக சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் இணையதள பதிவு முறையில் வழங்குதல்.

2. அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம் வாயிலாக வேளாண் சார்ந்த / உணவு சார்ந்த தொழில்கள் மேம்பாட்டினை மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்துதல்.

3. மானியங்கள் அனுமதிப்பது மற்றும் வழங்குதல்.

4. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மகளிருக்கான தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

5. பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத்திட்டம் போன்ற மைய அரசு திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. தொழில் முனைவோருக்கு வழிகாட்டியாக செயல்படுதல், அதாவது புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல், அவற்றிற்கான திட்ட அறிக்கைகள் தயாரித்தல், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம் நிதி வசதி பெற்றுத் தருதல், இயந்திரங்களை தேர்ந்தெடுத்து கொள்முதல் செய்ய உதவுதல். தேவைப்படும்போது, தொழில் முனைவோர் ஒப்பந்தத்தை பரிசீலனை செய்தல்.

7. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் மைய / மாநில அரசுகளின் தொழில் மேம்பாடு குறித்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.

8. தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொது கட்டமைப்பு வசதிகள் / தொழில் குழுமப் பணிகள் ஏற்படுத்தித் தருவது.

9. பாரம்பரிய தொழில்கள் புத்துணர்ச்சி பெறும் நிதித் திட்டத்தின்கீழ் (SFURTI) புதிய வளர்ச்சி பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஊரகத்தொழில் குழுமங்களின் வளர்ச்சியினை மேற்கொள்வது.

10. மின்சார மற்றும் மின்னணு தொழில்களுக்கான தனி தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

11. இரசாயனம், உலோகம், உலோகப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுக் கருவிகள் ஆகியவற்றிற்கு பரிசோதனை வசதிகளை அளித்தல்.

12. இலகு ரக பொறியியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி வசதிகள் அளித்தல்.

13. தகவல் வங்கி, பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்.

14. வீட்டு உபயோக மின்சாதனங்கள் முதலியவைகளுக்கான தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

15. தொழில் நுட்பப் பொருளாதார கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

16. குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை மேம்படுத்துதல்.

17. மாவட்ட தொழில் மையங்களிலுள்ள ஏற்றுமதி வழிகாட்டி பிரிவின் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

18. நலிந்த தொழில் அலகுகளைக் கண்டறிந்து அறிவித்து உதவி செய்தல்.

19. சிறு மற்றும் குறுதொழில் பிரிவுகளுக்காக மாநில / மைய அரசு அறிவிக்கும் சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.

**3.** அரசினால் ஒப்புதலளிக்கப்படும் திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு நிறுவனங்களான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT), தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் (EDI) ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் நிதியினை பெற்றுத்தறுதல் ஆகிய பணிகளையும் இந்த இயக்ககம் கவனித்து வருகிறது.

**பாகம் – ஆ**

**பிற்சேர்க்கை 1 (1)**

**ஊரக மற்றும் சிறுதொழில்கள்**

**திட்டம் / திட்டம் சாரா ஒதுக்கீடு**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| விவரங்கள் | **2004–05–இல்** செலவு | வரவு செலவு திட்ட மதிப்பீடு **2005–06** | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு **2005–06** | வரவு செலவு திட்ட மதிப்பீடு **2006–07** |
|---|---|---|---|---|
| திட்டத்தில் சேராதவை | 289968 | 288437 | 237988 | 264066 |
| திட்டத்தில் சேர்ந்தவை | 146138 | 272540 | 468154 | 170238 |
| பெரு மொத்தம் | **436106** | **560977** | **706142** | **434304** |

## பிற்சேர்க்கை 1 (2)

## வரவு–செலவு சுருக்கம்

(ரூபாய்ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள் பற்றிய விவரங்களும் நடவடிக்கை வகைகளும் | 2004–05–இல் செலவு | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2005–06 | | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2005–06 | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2006–07 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத் தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத் தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத் தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத் தம் |
| 1. | மாநிலத் திட்டங்கள் | 289968 | 112108 | 402076 | 288437 | 243407 | 531844 | 237988 | 440912 | 678900 | 264066 | 145825 | 409891 |
| 2. | மைய அரசு பொறுப்பேற்கு ம் திட்டங்கள் | 0 | 22961 | 22961 | 0 | 21086 | 21086 | 0 | 20463 | 20463 | 0 | 21011 | 21011 |
| 3. | மத்திய மாநில அரசுகள் செலவை சம அளவில் ஏற்கும் திட்டங்கள் | 0 | 11069 | 11069 | 0 | 8047 | 8047 | 0 | 6779 | 6779 | 0 | 3402 | 3402 |
| | மொத்தம் | **289968** | **146138** | **436106** | **288437** | **272540** | **560977** | **237988** | **468154** | **706142** | **264066** | **170238** | **434304** |

**பிற்சேர்க்கை 1 (3) 1. நிதி ஆதாரம்**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| வ. எண் | முக்கிய தலைப்புகள் | 2004–05 இல் செலவு | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2005–06 | | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2005–06 | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2006–07 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | 2407. மலைத் தோட்டங்கள் | 0 | 11500 | 11500 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | 2425 கூட்டுறவு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | 2851. கிராமம் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் தொழில் கூட்டுறவுகள் | 193038 | 69510 | 262548 | 250009 | 237330 | 487339 | 203306 | 436702 | 640008 | 224393 | 170223 | 394616 |
| 4 | 2852. தொழில்கள் | 16585 | 10 | 16595 | 38428 | 10 | 38438 | 34682 | 10 | 34692 | 39673 | 10 | 39683 |
| 5 | 2885. தொழில்கள் நிறுவிட உதவி | 0 | 52220 | 52220 | 0 | 30000 | 30000 | 0 | 10000 | 10000 | 0 | 1 | 1 |
| 6 | 4425. கூட்டுறவு சங்கங்களுக்கான முதலீட்டுச்செலவு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | 4551. மலைப்பகுதிகள் குறித்த முதலீட்டுச்செலவு | 0 | 2000 | 2000 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 8 | 4851. கிராமம் மற்றும் சிறு தொழில்களின் மீதான முதலீட்டுச்செலவு | 0 | 10898 | 10898 | 0 | 5198 | 5198 | 0 | 3498 | 3498 | 0 | 3 | 3 |
| 9 | 6851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 17944 | 17944 | 0 | 0 | 0 |
| 10 | 6860 தொழில் நுகர்வோர் கடன்கள் | 10245 | 0 | 10245 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 11 | 6885 தொழில்கள் நிறுவிட கடன்கள் | 70100 | 0 | 70100 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **289968** | **146138** | **436106** | **288437** | **272540** | **560977** | **237988** | **468154** | **706142** | **264066** | **170238** | **434304** |

பிற்சேர்க்கை 1 (4)

தொழில் வணிக இயக்ககத்திற்கு தேவைப்படும் நிதி 2005–06 மற்றும் 2006–07 (ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள் பற்றிய விவரங்களும் நடவடிக்கை வகைகளும் | 2004–05 இல் செலவு | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2005–06 | | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2005–06 | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2006–07 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| அ. | மாநிலத் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| 1 | நெறிப்படுத்தல் மேற்பார்வை மற்றும் கொள்கை வகுத்தல் | 16437 | 0 | 16437 | 38310 | 0 | 38310 | 34576 | 0 | 34576 | 39551 | 0 | 39551 |
| 2 | தொழிற்பேட்டைகள் | 4526 | 113 | 4639 | 4528 | 17 | 4545 | 4276 | 9 | 4285 | 4584 | 11 | 4595 |
| 3 | சிறு தொழில்கள் | 165012 | 88295 | 253307 | 219816 | 212794 | 432610 | 176223 | 412983 | 589206 | 193226 | 145572 | 338798 |
| 4 | மானியம் | 0 | 52220 | 52220 | 0 | 30000 | 30000 | 0 | 10000 | 10000 | 0 | 1 | 1 |
| 5 | கட்டணத்தையும் விலையையும் முறைப்படுத்துதல் | 148 | 0 | 148 | 118 | 0 | 118 | 106 | 0 | 106 | 122 | 0 | 122 |
| 6 | தென்னை நார்த் தொழில்கள் | 0 | 4533 | 4533 | 0 | 390 | 390 | 0 | 17716 | 17716 | 0 | 230 | 230 |
| 7 | கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 8 | ஏனைய கூட்டுறவு சங்கங்களில் முதலீடு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 9 | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 23500 | 0 | 23500 | 25665 | 0 | 25665 | 22807 | 0 | 22807 | 26583 | 0 | 26583 |
| 10 | பொதுத்துறை நிறுவனங் களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் கடன்கள் | 80345 | 0 | 80345 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 11 | கூட்டுறவு சங்கங்களில் முதலீடு | 0 | 2000 | 2000 | 0 | 195 | 195 | 0 | 194 | 194 | 0 | 1 | 1 |
| 12 | தொழில் கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி | 0 | 10 | 10 | 0 | 10 | 10 | 0 | 10 | 10 | 0 | 10 | 10 |
| 13 | ஏனைய இனங்கள் | 0 | 11500 | 11500 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14 | மீளப்பெறுகை கழித்தல் | 0 | -46563 | -46563 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | அனாமத்து | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **289968** | **112108** | **402076** | **288437** | **243407** | **531844** | **237988** | **440912** | **678900** | **264066** | **145825** | **409891** |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ. | மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| 1 | நெறிப்டுத்தல் மேற்பார்வை மற்றும் கொள்கை வகுத்தல் | 0 | 3712 | 3712 | 0 | 4086 | 4086 | 0 | 3463 | 3463 | 0 | 4011 | 4011 |
| 2 | தொழிற்பேட்டைகள் | 0 | 10000 | 10000 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | ஏனைய இனங்கள் | 0 | 9249 | 9249 | 0 | 17000 | 17000 | 0 | 17000 | 17000 | 0 | 17000 | 17000 |
| | ***மொத்தம்*** | **0** | **22961** | **22961** | **0** | **21086** | **21086** | **0** | **20463** | **20463** | **0** | **21011** | **21011** |
| இ. | மத்திய மாநில அரசுகள் செலவைச் சமஅளவில் ஏற்கும் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| 1 | சிறு தொழில்கள் | 0 | 8191 | 8191 | 0 | 5001 | 5001 | 0 | 3302 | 3302 | 0 | 2 | 2 |
| 2 | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 0 | 2878 | 2878 | 0 | 3046 | 3046 | 0 | 3477 | 3477 | 0 | 3400 | 3400 |
| 3 | கைத்தறித் தொழில்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | ஏனைய இனங்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | *மொத்தம்* | **0** | **11069** | **11069** | **0** | **8047** | **8047** | **0** | **6779** | **6779** | **0** | **3402** | **3402** |
| | பெரு மொத்தம் | **289968** | **146138** | **436106** | **288437** | **272540** | **560977** | **237988** | **468154** | **706142** | **264066** | **170238** | **434304** |

பிற்சேர்க்கை 1 (5) – அ . நோக்கம் வாரியான செலவு வகைகள் (ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2004–05–இல் செலவு | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2005–06 | | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2005–06 | | | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2006–07 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | சம்பளங்கள் | 170231 | 2134 | 172365 | 100018 | 2186 | 102204 | 89998 | 19394 | 109392 | 99310 | 2364 | 101674 |
| 2 | தினக்கூலி | 254 | 0 | 254 | 436 | 0 | 436 | 827 | 0 | 827 | 827 | 0 | 827 |
| 3 | அகவிலைப்படிகள் | 46645 | 1133 | 47778 | 63220 | 1394 | 64614 | 55446 | 1331 | 56777 | 69836 | 1673 | 71509 |
| 4 | பயணச் செலவுகள் | 3362 | 216 | 3578 | 4150 | 212 | 4362 | 3563 | 202 | 3765 | 4111 | 202 | 4313 |
| 5 | அலுவலகச் செலவுகள் | 6654 | 744 | 7398 | 9077 | 989 | 10066 | 8552 | 685 | 9237 | 8875 | 281 | 9156 |
| 6 | வாடகை கட்டணம் (ம) வரிகள் | 2433 | 0 | 2433 | 2247 | 0 | 2247 | 2383 | 0 | 2383 | 2122 | 0 | 2122 |
| 7 | வெளியீடுகள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 14 | 0 | 14 | 14 | 0 | 14 |
| 8 | விளம்பரச் செலவுகள் | 695 | 0 | 695 | 807 | 3000 | 3807 | 842 | 3000 | 3842 | 807 | 1 | 808 |
| 9 | உதவித்தொகை | 0 | 75377 | 75377 | 0 | 131707 | 131707 | 7280 | 371417 | 378697 | 2 | 113411 | 113413 |
| 10 | பங்குத்தொகை | 10 | 1200 | 1210 | 13 | 2500 | 2513 | 65 | 2500 | 2565 | 65 | 1 | 66 |
| 11 | மானியம் | 65856 | 68587 | 134443 | 100001 | 98000 | 198001 | 60788 | 34000 | 94788 | 70001 | 35001 | 105002 |
| 12 | படிப்பு உதவித்தொகை | 176 | 5320 | 5496 | 128 | 5600 | 5728 | 116 | 8400 | 8516 | 135 | 1 | 136 |
| 13 | பெரும் பணிகள் | 11 | 0 | 11 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14 | சிறிய பணிகள் | 110 | 0 | 110 | 1 | 1 | 2 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 15 | பராமரிப்புப்பணிகள் | 1025 | 0 | 1025 | 310 | 0 | 310 | 310 | 0 | 310 | 310 | 0 | 310 |
| 16 | இயந்திரச்சாதனங்கள் | 184 | 707 | 891 | 0 | 3 | 3 | 0 | 2 | 2 | 0 | 1 | 1 |
| 17 | மோட்டார் வண்டிகள் | 1641 | 99 | 1740 | 152 | 0 | 152 | 152 | 65 | 217 | 200 | 0 | 200 |
| 18 | முதலீடுகள் | 0 | 0 | 0 | 0 | 5195 | 5195 | 0 | 1694 | 1694 | 0 | 2 | 2 |
| 19 | பொருட்கள் | 0 | 11900 | 11900 | 1961 | 0 | 1961 | 1630 | 0 | 1630 | 1487 | 0 | 1487 |
| 20 | இயந்திரங்களும், தளவாடங்களும் | 1655 | 0 | 1655 | 970 | 1018 | 1988 | 970 | 3001 | 3971 | 970 | 14 | 984 |
| 21 | வட்டி | 28 | 6336 | 6364 | 0 | 0 | 0 | 24 | 0 | 24 | 0 | 0 | 0 |
| 22 | அனாமத்து | 1952 | 4000 | 5952 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 23 | வல்லுநர் தொகை கொடுத்ல் | -13397 | 0 | -13397 | 1690 | 2100 | 3790 | 1577 | 3150 | 4727 | 1606 | 0 | 1606 |
| 24 | இதர கட்டணங்கள் | 0 | 0 | 0 | 89 | 1 | 90 | 135 | 1 | 136 | 135 | 1 | 136 |
| 25 | பெட்ரோல் | 9 | 0 | 9 | 2700 | 0 | 2700 | 2500 | 0 | 2500 | 2500 | 0 | 2500 |
| 26 | பண்டிகை முன்பணம் | 0 | 0 | 0 | -2 | 0 | -2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 27 | இழப்பீடு உதவித் தொகை | 0 | 0 | 0 | 3 | 0 | 3 | 3 | 0 | 3 | 2 | 0 | 2 |
| 28 | பரிசுகள் அளித்தல் | 46 | 0 | 46 | 85 | 100 | 185 | 276 | 100 | 376 | 276 | 1 | 277 |
| 29 | புத்தகங்களின் செலவு | 388 | 0 | 388 | 1 | 0 | 1 | 4 | 0 | 4 | 4 | 0 | 4 |
| 30 | அச்சடித்தல் | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 31 | பயிற்சி | 0 | 11309 | 11309 | 45 | 17434 | 17479 | 107 | 17434 | 17541 | 45 | 17184 | 17229 |
| 32 | கணிணி மற்றும் உதிரி பாகங்கள் | 0 | 1254 | 1254 | 334 | 1100 | 1434 | 424 | 1095 | 1519 | 424 | 100 | 524 |
| 33 | கடன்கள் | 0 | 2385 | 2385 | 0 | 0 | 0 | 0 | 683 | 683 | 0 | 0 | 0 |
| 34 | மீளப் பெறுகை கழித்தல் | 0 | -46563 | -46563 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **289968** | **146138** | **436106** | **288437** | **272540** | **560977** | **237988** | **468154** | **706142** | **264066** | **170238** | **434304** |

## பாகம் – இ

### 1.1 இயக்குதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கொள்கை வகுத்தல்

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், கூடுதல் ஆணையர் ஆகியோர் இந்திய ஆட்சிப்பணியை சேர்ந்தவர்கள். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்ககத்தின்கீழ் தொழில்நுட்ப தகுதி படைத்த ஒரு கூடுதல் இயக்குநர் மற்றும் 6 இணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் (வார்ப்பு), (இந்தியப் பொருளாதாரப்பணி), கருவூலக் கணக்குத் துறையிலிருந்து ஒரு முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் தொழில்நுட்ப / தொழில்நுட்பமல்லாத பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். சார்பு அலுவலர்கள் செயல் அடிப்படையில் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு மாநில அளவிலான அதிகாரம் உண்டு.

### 1.2 மாவட்ட தொழில் மையங்கள்

மாவட்ட அளவில் மாவட்ட தொழில் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் நுட்ப களப் பணி அலுவலர்கள் மற்றும் செயல் மேலாளர்களின் துணையுடன் மாவட்ட பொது மேலாளர்களால் மாவட்ட தொழில் மையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. தொழில் முனைவோர்களுக்கு புதிய தொழில்கள் துவங்கவும், செயல்பட்டுவரும் நிறுவனங்கள் முன்னேற வழி வகை செய்வதும் பொது மேலாளார்களின் பொறுப்பாகும். மேலும் சிறு தொழில்கள் கால மாற்றத்திற்கேற்றவாறு புதிய வாய்ப்புக்களை மாவட்டந்தோறும் கண்டறிந்து வழி நடத்துதலும் இவர்களது பொறுப்பாகும்.

### 1.3 இரசாயனத் தொழில்கள் பிரிவு

தொழில் வணிகத்துறையின் இரசாயனத் தொழில்கள் பிரிவு தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதாகும். இப்பிரிவு கீழ்க்கண்ட வசதிகளை அளிக்கிறது.

1. அனைத்து வகை தொழிற்சாலைக் கச்சா பொருட்கள் மற்றும் உற்பத்தி பொருட்களை ஆய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
2. இரசாயனம் மற்றும் சார்புடைய தொழில்களில் ஏற்படும் தொழில் நுட்பம் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்.
3. தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கு கோரிக்கையின் அடிப்படையில் ஆய்வுகள் குறித்து செய்முறைப் பயிற்சி அளிப்பது.
4. திட்ட வரைவு அறிக்கைகள் அளித்தல்
5. இரசாயனம் மற்றும் அதன் சார்பு தொழில்களுக்கு நுட்ப தகவல் வழங்குவது.

6. மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் கேட்டுக் கொள்ளும் போது ஆல்கஉறால் சார்ந்த தொழிற்சாலைகள் குறித்து தேர்ந்த கருத்துரை வழங்குதல். ஆல்கஉறால் தொழிற்சாலைகளின் செயல் திறனை மதிப்பிடுவதற்கான மாதிரி உற்பத்தியின் போதும் திடீர் ஆய்வுகளின் போதும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

## 1.4 மின் மற்றும் மின்னணு பிரிவு

இவ் இயக்குநரகத்தின் மின் மற்றும் மின்னணு பிரிவு தமிழ் நாட்டில் மின் மற்றும் மின்னணு தொழில்களின் வளர்ச்சிக்கு துணைபுரிகிறது. தமிழ் நாட்டில் மின் மற்றும் மின்னணு தொழில்களின் வளர்ச்சிக்காக எட்டு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மின் மற்றும் மின்னணு பிரிவு கீழ்காணும் வசதிகளை அளிக்கிறது.

1. தொழில் முனைவோர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் தொழிலக தகவல்களை அளித்தல்.
2. தொழில் திட்டங்களை அளித்தல்
3. தொழில் முனைவோர்கள் தாங்கள் தயாரித்த மின்சார சாதனங்கள் சோதனை செய்யும் வசதி அளிக்கிறது.
4. தரக்கட்டுப்பாட்டு ஆணை செயலாக்கப்படுதல்
5. மருத்துவக் கருவிகளைச் செப்பனிடுதல் மற்றும் பழுது பார்த்தல்

## 1.5 புள்ளி விவர மையப் பிரிவு

புள்ளி விவர மையப்பிரிவு இந்த இயக்ககத்தில் 1977ல் ஏற்படுத்தப்பட்டது. கணக்கெடுப்பின் மூலம் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொள்வதற்கும், மாதிரி கணக்கெடுப்பு மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை நாளது வரையில் தொடர்ந்து பராமரிப்பதற்கும், இத்திட்டம் 100 சதவீதம் மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படும் தொடர் திட்டமாகும்.

## 1.6 தொழிற்கூட்டுறவு பிரிவு

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்கள் இம்மாநிலத்தில் உள்ள தொழிற் கூட்டுறவு சங்கங்களின் செயற்பதிவாளர் ஆவார். ஆகவே, இம்மாநிலத்தில் தொழிற் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்யவும், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ளபடி அனைத்து பணிகளையும் நிறைவேற்றும் பொறுப்பு தொழில் வணிகத் துறை இயக்ககத்திற்கு உள்ளது.

## 2 பல்வேறு திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் செயல்பாடுகள்

## 2.01 சிறுதொழில் நிறுவனங்களாய் பதிவு செய்தல்

### 2.01.1 இணைய தளம் மூலம் தற்காலிக சிறுதொழில் சான்றிதழ் பதிவு செய்தல்

சிறுதொழில் அலகுகள் தொழில் வணிக இயக்ககத்தில் தங்கள் விருப்பத்திற்கிணங்க தங்களை பதிவு செய்து கொள்ளலாம். வருங்கால முனைவோர்களின் நலனுக்காகவும், வசதிக்காவும் இணையதளம் வாயிலாக மாநிலத்தில் 269 அங்கீகாரம் பெற்ற கணினி மையங்கள் மூலம் சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.50/– கட்டணம் செலுத்தி தற்காலிக சான்றிதழ் பெற இவ்வியக்ககம் வழிவகுத்துள்ளது. 2005–2006ல், 60,211 வருங்கால முனைவோர்கள் இணையதளம் வாயிலாக பதிவு செய்து உள்ளனர். துறையால் வழங்கப்படும் தற்காலிக சான்றிதழ், சட்ட பூர்வமான அறுதிகள், கடன் ஒப்பளிப்பு, மின் இணைப்பு மற்றும் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ஒதுக்கீடு செய்ய மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் ஆகியவற்றை பெற வழி வகுக்கிறது.

### 2.01.2 நிரந்தர சிறுதொழில் பதிவு சான்று

ஒரு நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கிய உடனேயே நிரந்தர சிறுதொழில் பதிவு சான்று பெறுவதற்குத் தகுதியைப் பெறுகிறது. நிரந்தர பதிவுச்சான்றிதழ் சிறுதொழில் நிறுவனங்கள் அரசின் மான்யங்கள், கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை, அரசு ஒப்பந்தப் புள்ளிக்கான பிணை வைப்புத் தொகையிலிருந்து விலக்கு ஆகிய அரசின் சிறப்பு சலுகைகளைப் பெறுகின்றன.

2005–06ஆம் அண்டில் 67,005 (இணைய தளத்தின் மூலம் 60,211 உட்பட) தற்காலிக சிறு தொழில் பதிவு சான்றும், 20,399 நிரந்தர சிறு தொழில் பதிவு சான்றும் இத்துறையில் வழங்கப்பட்டன.

2005–06ல் சிறு தொழில் நிரந்தர பதிவுச் சான்று சம்பந்தமாக எய்திய முன்னேற்றம் பற்றிய விவரம்.

| | 2005–06 ஆம் ஆண்டு இலக்கு | 31.3.2006 வரை எய்தியது |
|---|---|---|
| நிரந்தர சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் | 33000 | 20399 |

2006–07ஆம் ஆண்டில் 70,000 தற்காலிக சான்றிதழ்கள் மற்றும் 30,000 நிரந்தர பதிவு சான்றிதழ்கள்வழங்க துறை முயற்சிகள் எடுக்கும்.

## 2.02 சிறுதொழில்களுக்கு அளிக்கப்படும் சேவைகள்

### 2.02.1 ஒற்றைச் சாளரமுறை சேவைகள்

விருப்பமுள்ள தொழில் முனைவோர்களின் இடர்பாடுகளைத் தீர்த்து, விரைவாக தொழில் துவங்குவதற்கு வசதியாக மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், உள்ளாட்சிகள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை, நகர் மற்றும் ஊரமைப்புத்துறை, பொதுசுகாதாரத்துறை மற்றும் ஏனையோரிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளைப் பெற ஒற்றைச் சாளரமாக மாவட்ட தொழில் மையங்கள் திகழ்கின்றன. இம்மையங்களின் கூட்டம் மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூடி முடிவெடுக்கும். 2005–06ஆம் ஆண்டில் 31.3.06 வரையில் இம்மையங்களில் 1419 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 1220 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன.

### 2.02.2 ஏற்றுமதி வழிகாட்டு மையம்

தொழில் முனைவோரை ஊக்குவித்து ஏற்றுமதியை வளர்க்க ஏற்றுமதி சேவை மயம் மாவட்ட தொழில் மையங்களில் அரசால் அமைக்கப்பட்டது. தற்போதைய ஏற்றுமதிகள் பற்றிய தகவல்கள், புதிய ஏற்றுமதி வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் மற்றும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட நடைமுறைகள் போன்ற உதவிகளை ஏற்றுமதி சேவை மையம் அளிக்கிறது. ஏற்றுமதியாளர்களுக்கு உதவ மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஏற்றுமதி மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டு பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதியில் தொழில் முனைவோருக்கு பயன்தரும் வகையில் ஊக்குவிக்க இத்துறையில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு ஏற்றுமதியை மேம்படுத்தும் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

### <u>2.02.3</u> நூலகங்களோடு உள்ள தொழில் நுட்ப தகவல் மையங்கள்

தொழிலதிபர்கள், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் மற்றும் ஏனையோர்களின் தொழில் நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்து தகவல் வசதிகளை அளிப்பதற்காக கிண்டி, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், காட்பாடி (வேலூர்) திருச்சிராப்பள்ளி, சேலம், மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நூலகங்களுடன் கூடிய தொழில் நுட்ப தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலகங்கள் பல அறிவியில், தொழில்நுட்பம் மற்றும் வியாபார வெளியீடுகளுக்கு சந்தாதாரராக உள்ளது. நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு நேரடி தொழில் நுட்ப தகவல் வசதிகளும் தொடர்ந்து குறிப்பு வசதிகளும் அளிக்கப்படுகிறது. தொழில் நுட்ப நூல்கள், வார மற்றும் மாதாந்திர இதழ்கள் அறிவியல் நூல்கள் ஆகியவற்றில் தொழில் நுட்பத் தகவல்களைத் தேடி இவற்றை வகையாக முறைப்படுத்தி, தொகுத்து தொழில் நுட்ப தகவல்களை நாடி வருபவர்களின் குறிப்புக்கென பராமரிக்கப்பட்டு வருகிறது. வாசகர்களுக்கு நகல் எடுத்துத் தரும் வசதியும் இந்

நூலகத்தில் அளிக்கப்படுகிறது. 2005-06இல் ஏறக்குறைய 20,512 நபர்கள் இவ்வசதிகளை பயன்படுத்தியுள்ளனர்.

## 2.3 சோதனை சேவை மற்றும் உற்பத்தி வசதிகள்

### 2.3.1 வேதியியல் பரிசோதனைக் கூடங்கள்

#### (i) வேதியியல் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், கிண்டி, சென்னை–32

தொழிலகங்களுத் தேவையான அனைத்து மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுப் பணிகளை இந்த ஆய்வுக்கூடம் மேற்கொள்ளுகிறது. இந்த ஆய்வுக் கூடம் அனைத்து பகுப்பாய்வுகளையும் சோதனைகளையும் மலிவான கட்டணத்தில் மேற்கொள்ளும் வகையில் அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், ஆப்டிக்கல் எமிசன் ஸ்பெக்ட்ரோ மீட்டர், லீக்கோ கார்பன் சல்பர் சாதனம் மற்றும் திறன் வரைவித்தல் சாதனங்கள் போன்ற சிறப்புக் கருவிகளை பெற்றுள்ளது. இயந்திர மற்றும் உலோகவியல் ஆய்வுக் கூடத்தில் உற்பத்தி பொருட்களின் நீட்சித் தன்மை, அழுத்தத்தன்மை, கடினத்தன்மை ஆகியவை பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. மாவட்ட தொழில் மையம் வழங்கும் நிரந்தர பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ள தகுதியான சிறு தொழில் நிலையங்களுக்கு 50 விழுக்காடு சோதனைக் கடடணச் சலுகை அளிக்கப்படுகிறது.

இவ்வாய்வுக் கூடத்தில் மத்திய மாநில அரசுகளின் சமபங்காகத் தன் நிதிவுதவியுடன் உலோகங்களை துல்லியமாக ஆய்வு செய்வதற்கான ஓ.இ.எஸ் நவீன இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.

#### (ii) மண்டல பரிசோதனைக் கூடங்கள்

மதுரையிலுள்ள மண்டல பரிசோதனைக் கூடம் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபும், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, விருதுநகர், கரூர், பெரம்பலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிற்சாலைகளின் சோதனைத் தேவைகளை நிறைவு செய்கிறது. இவ்வாய்வுக் கூடத்தில் மத்திய மாநில அரசுகளின் சமபங்காகத் தன் நிதிவுதவியுடன் மருந்துகள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை துல்லியமாக ஆய்வு செய்வதற்கான எச்.பி.எல்.சி நவீன இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.

தூத்துக்குடியிலுள்ள மண்டல பரிசோதனைக் கூடம் தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிற்சாலைகளின் தேவையினை நிறைவு செய்கிறது.

கோயம்புத்தூரிலுள்ள மண்டல பரிசோதனைக் கூடம் கோயம்புத்துார், ஈரோடு, மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்கிறது.

சேலத்திலுள்ள மண்டல பரிசோதனைக் கூடம் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் மற்றும் அவற்றை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சவ்வரிசி மற்றும் மாவுத் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதுடன் சிலவகை கனிமங்கள், மாட்டுத்தீவனம், தண்ணீர், நார், நெட்டி முதலியவற்றின் மாதிரிகளை சோதனை செய்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் இயந்திரவியல் ஆய்வுத் தேவைகளை நிறைவு செய்வதற்கான கட்டமைப்பு வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2005–2006ல் (மார்ச், 2006) முடிய ஆண்டில் வரப்பெற்ற மாதிரிகள், பயனடைந்த தொழிற்சாலகள் ஆகியவற்றின் எண்ணிக்கை விவரங்கள் வருமாறு.

| பிரிவின் பெயர் | பரிசோதனையிடப்பட்டமாதிரிப் பொருட்களின் எண்ணிக்கை | பயன் பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், சென்னை | 5125 | 1127 |
| மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | 11687 | 2011 |
| மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர் | 2748 | 641 |
| மண்டல பரிசோதனைக் கூடம், சேலம் | 27885 | 2842 |
| மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி | 4746 | 322 |

**பரிசோதனை மாதிரிகளுக்கான இலக்கு மற்றும் சாதனை**
**இராசாயப் பிரிவு**

| வரிசை எண் | அலகு | 2005-06 | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| பரிசோதனை மாதிரிகள் | | | |
| 1) | இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி, சென்னை 32 | 11025 | 5125 |
| 2) | மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | 7760 | 11687 |
| 3) | மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர் | 5880 | 2748 |
| 4) | மண்டல பரிசோதனைக் கூடம், சேலம் | 7730 | 27885 |
| 5) | மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி | 2630 | 4746 |

| வரிசை எண் | அலகு | 2005-06 | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1) வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1) | இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி, சென்னை 32 | 31.50 | 26.72 |
| 2) | மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | 21.880 | 32.10 |
| 3) | மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர் | 15.600 | 8.30 |
| 4) | மண்டல பரிசோதனைக் கூடம், சேலம் | 13.180 | 38.54 |
| 5) | மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி | 6.500 | 12.33 |

**(iii) இரசாயனத் தொழில் தகவல் வங்கி**

இரசாயனம் அதைச்சார்ந்த பொருட்கள் துறையில் புள்ளி விவரம் மற்றும் ஆலோசனை வழங்கும் சேவையை வலுப்படுத்தும் பொருட்டு தகவல் வங்கி அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. தமிழ் நாட்டில் சிறு தொழில் துறையில் இரசாயனம் மற்றும் சார்புடைய தொழிற்சாலைகளை அமைப்பதில் விருப்பமுள்ள தொழில் முனைவோர்களுக்கு உதவி புரிவதற்காக செயல்முறை திட்ட அறிக்கைகள் தயாரிப்பதிலும் இரசாயனம் அது சார்ந்த தொழிற்சாலைகளுக்கான புள்ளி விவரம் சேகரிப்பதிலும் இது ஈடுபட்டுள்ளது. திட்ட அறிக்கையில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான சந்தை தேவை, உற்பத்தி அளவு, எதிரிகால தேவை, தயாரிக்கும் முறை, பணத்தேவை, கச்சாப் பொருட்கள், விசைப்பொறிகள், கிடைக்குமிடங்கள் ஆகிய தகவல்கள் தரப்படுகின்றன. இரசாயனத் தொழில் மற்றும் அதைச்சார்ந்த சிறுதொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழில் பற்றிய தகவல்களை அளிக்கிறது.

173 செயல்முறை திட்ட வரைவுகள் இங்கு கிடைக்கின்றன. மேலும் பல இதழ்களிலிருந்து பெறப்படும் வேதியியல் தொழிற்சாலைகள் குறித்த தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. செயல்முறைத் திட்ட அறிக்கைகள் மிகக் குறைந்த விலையில் ரூ.50/– க்கு கிடைக்கின்றன. 2005-06ஆம் ஆண்டில் 50 திட்ட அறிக்கைகள் விற்கப்பட்டுள்ளன.

(iv) பரிசோதனைக்கூட ஆய்வு

இரசாயனத் தொழில்களில் செய்முறைகள் மற்றும் செய்முறைகள் பற்றி தொழில் முனைவோருக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து ஆய்வுக்கூட பரிசோதனையை இப்பிரிவு மேற்கொள்ளுகிறது. 2005–2006ஆம் ஆண்டு கீழ்க்காணும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. பாலி வினைல் அசிடேட் கம் (காகித உறை ஒட்டும் நிலை)
2. பாலி வினைல் அசிடேட் கம் (பட்டாசு தொழிற்சாலைகளுக்கு)
3. சலவை சோப்பு (பிரீமியம் தரம்)

**(v) அரசு அறிவியல் கண்ணாடி உபகரணங்களுக்கான உற்பத்தி மையம், கோயம்புத்தூர்**

இம்மையம் வேளாண்மைத்துறை, மற்ற அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களின் பரிசோதனை கூடங்களுக்குத் தேவையான அறிவியல் கண்ணாடி உபகரணங்களைத் தயாரிக்கிறது.

2005-06 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.6.86 இலட்சம் விற்பனை செய்துள்ளது.

### 2.3.2 மின் அமைப்புகள்

### 2.3.2.1 மின் மற்றும் மின்னணு தொழில் தகவல் வங்கி மற்றும் மையம், சென்னை

இம்மையம் மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு தேவையான அடிப்படைத் தகவல்கள் மற்றும் கீழ்க்கண்ட வழிமுறைகளை விரிவான முறையில் அளிக்கிறது:–

1. திட்டத் தொகுப்புகள்
2. அரசின் கொள்கை மற்றும் நடைமுறை
3. தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் தொழில் நுட்ப மாற்றம்
4. பல்வேறு நிதி நிறுவனங்களின் நிதி உதவித் திட்டம்
5. இயந்திரம், சாதனம் மற்றும் மூலப்பொருட்கள்
6. உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள்
7. விற்பனை வாய்ப்பு பற்றிய தகவல்
8. வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த தகவல்

தொழில் முனைவோரின் பயனுக்கென ஒரு தொழில் நுட்ப நூலகம் உள்ளது. இந்நூலகம் மின்சாரம், மின்னணுவியல், தகவல் தொடர்பு நுண்கருவிகள் சம்பந்தப்பட்ட 1400 புத்தகங்கள் மற்றும் 100 சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது.

நல்ல முறையில் தகவல் அளிக்கும் நூலகமாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் இதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தொழில் முனைவோரின் பயன்பாட்டிற்காக ஒளி அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் மின்னணுவியல் சிறு தொழில்கள் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறுவதில் இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ள கணினி அமைப்பு தொழில் முனைவோருக்கும் நன்முறையில் பயன்படுகிறது.

### 2.3.2.2 மத்திய மின் ஆய்வுக் கூடம், காக்களூர்

2005–2006ல் 4823 மின்பொருட்களை சோதனை செய்ததின் மூலமாக ரூபாய் 124.36 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இந்திய தர நிர்ணய மையத்தின் மூலமாக வருகின்ற ஏறத்தாழ 160 மின் பொருட்களை இந்த சோதனைக் கூடம் ஆய்வு செய்கிறது. மேலும் தரக் கட்டுப்பாட்டு ஆணைகளை அமல்படுத்த உரிய அலுவலர் மூலமாக சந்தையில் உள்ள மின் பொருட்களை சேகரித்து அனுப்பும் பொருட்களையும் இம்மையம் சோதனை செய்வதின் மூலம் மின் பொருட்களை பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு பாதுகாப்பான மற்றும் தரமான பொருட்கள் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

இந்த ஆய்வுக் கூடம் தேசிய பகுப்பாய்வு மற்றும் அளவு குறியீடு பரிசோதனைக்கூடம், இந்தியத் தர நிர்ணய மையம்(பி.ஐ.எஸ்), இரயில்வே, இரயில் இந்தியா டெக்னோ எக்கனாமிக் சர்வீஸஸ்(ஆர்ஐடிஈஎஸ்) மற்றும் பொருள் வழங்கல் விற்பனை தலைமை அலுவலகம் (டி.ஜி.எஸ்.&டி) ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் அரசைச் சார்ந்த நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாக இந்த ஆய்வுக் கூடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மையம் மின் பொருள் தயாரிப்பாளர்கள் தரமான பொருட்களை தயாரிப்பதற்கான இரண்டு நாட்களுக்கான பயிற்சி அளிக்கிறது. இதற்கான கட்டணமாக பங்கு பெறும் நபர் ஒருவருக்கு ரூ. 1000./– வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசு வழங்கியுள்ள 50 விழுக்காடு உதவி மானியத்தொகை கொண்டு ரூ. 100 இலட்சத்தில் கூடுதல் வசதிகள் இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.2.3 பொது வசதி மையம், ஓசூர்

ஓசூரில் உள்ள பொது வசதி மையம் அப்பகுதியிலுள்ள மின் மற்றும் மின்னணு சாதனங்களின் உற்பத்தி மேம்பாட்டு வசதியை அளிக்கிறது. ஓசூரில் உள்ள பொது வசதி மையம் அப்பகுதியில் உள்ள மின்னணு நிறுவனங்களுக்கு உற்பத்தி மேம்பாட்டு வசதிகளை அளிக்கிறது. இதன் வளாகத்தில் தொழில் முனைவோர் உற்பத்தி மேம்பாடு செய்வதற்காக சுற்றுச்சூழல் அறை வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இது பொருட்களின் தரம் குறித்து விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

### 2.3.2.4 மின் மருத்துவக் கருவி பழுது பார்ப்பு நிலையங்கள்

கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மின் மருத்துவக் கருவி பழுது பார்ப்பு நிலையங்கள் மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நியைங்கள் ஏனைய அரசு மருத்துவ நிலையங்கள் முதலியவற்றிலுள்ள, மின் மருத்துவக் கருவிகளைச் செப்பனிடவும், பழுது பார்க்கவும் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட 13 மின் மருத்துவ கருவிகள் இங்கு பழுது பார்க்கப்படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1. பி.பி. அப்பேரட்டஸ்
2. சக்சன் அப்பேரட்டஸ்
3. சென்ட்ரி பியூஜிஸ்
4. ஆட்டோ கிளேவ்ஸ்
5. எச்.பி. ஸ்டெரிலைஸர்
6. இன்ஸ்ட்ரூமென்ட் ஸ்டெரிலைஸர்
7. பௌல் ஸ்டெரிலைஸர்
8. டிஸ்ட்டில்டு வாட்டர் ஸ்டில்
9. ஓவன்
10. இன்குபேட்டர்
11. ஆபரேசன் டேபிள்
12. டென்டல் சேர்
13. சேடோலெஸ்லேம்ப்ஸ்

2005–06ஆம் ஆண்டில் மின் மருத்துவ கருவிகள் சோதனை மையங்களின் செயல்திறன்

| வ. எண் | பணியினம் | 2005–06 (31.3.06 முடிய) |
|---|---|---|
| 1 | மின் மருத்துவ கருவிகள் பழுது பார்ப்பு நிலையம், கிண்டி<br>பழுது பார்க்கப்பட்ட கருவிகள்<br>பழுது பார்ப்பு கட்டணம் | 857<br>ரூ.5.40 இலட்சம் |
| 2 | மின் மருத்துவ கருவிகள் பழுது பார்ப்பு நிலையம், தஞ்சாவூர்<br>பழுது பார்க்கப்பட்ட கருவிகள்<br>பழுது பார்ப்பு கட்டணம் | 1003<br>ரூ. 4.55 இலட்சம் |
| 3 | மின் மருத்துவ கருவிகள் பழுது பார்ப்பு நிலையம், மதுரை<br>பழுது பார்க்கப்பட்ட கருவிகள்<br>பழுது பார்ப்பு கட்டணம் | 381<br>ரூ. 1.72 இலட்சம் |
| 4 | மின் மருத்துவ கருவிகள் பழுது பார்ப்பு நிலையம், கோயம்புத்தூர்<br>பழுது பார்க்கப்பட்ட கருவிகள்<br>பழுது பார்ப்பு கட்டணம் | 548<br>ரூ. 4.64 இலட்சம் |

## 2.4 பயிற்சி மையம்

### 2.4.1 பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி மையம்

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி மையம், பீங்கான் தொழில் நுட்பவியலில் 1964 ஆம் ஆண்டிலிருந்து பயிற்சி அளித்து வருகிறது. பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) தேறியவர்கள் இதில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். இப்பயிற்சிக்கு தற்போது ஒவ்வொரு ஆண்டும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதன் பயிற்சிக் காலம், வளாக பயிற்சி உட்பட, மூன்றரை ஆண்டுகள் ஆகும். தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் தேர்வுகளை நடத்தி பட்டயச் சான்றிதழ் வழங்குகிறது.

பல்வகையான செராமிக் தொழிற்சாலைகள் நிறைந்த இடத்தில் இப்பயிற்சி மையம் அமைந்திருப்பதால் இங்கு பயின்ற மாணவர்கள் வெகு எளிதாக தொழில் நுட்ப அறிவைப் பெற முடிகிறது. பெரிய நிறுவனங்களான ஜாண்சன் அன்டு ஜாண்சன், பாரி, நெய்சர், டால்மியா, ஸ்பார்டெக், கார்போரண்டம் யூனிவர்சல் மற்றும் டபுள்யூ.எஸ்.இன்சுலேட்டர்ஸ், போன்ற நிறுவனங்களிலும், கனடா, மலேசிய மற்றும் அரபு நாடுகளிலும் மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள்.

இது தமிழ் நாட்டிலுள்ள, இம்மாதிரியான ஒரே ஒரு பயிற்சி நிலையமாகும். இதில் அனைத்து வசதிகளையும் பெற்றுள்ள ஆய்வுக் கூடம் ஒன்று உள்ளது. இங்கு விருத்தாசலம் தொழிற்பேட்டையை சுற்றிலும் அமைந்துள்ள பீங்கான் தொழில் பிரிவுகளிலிருந்து வரப் பெற்ற பீங்கான் மூலப் பொருட்கள் மற்றும் பொருட்களின் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வுக்கூடம் தான் மாநிலத்திலேயே செங்கல் மற்றும் ஓடுகள் செய்வதற்கான களிமண்ணை பரிசோதனை செய்கின்ற ஒரே பரிசோதனைக்கூடமாகும்.

### 2.4.2 அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி,சென்னை–32

இப்பயிற்சி நிலையம் அறிவியல் கண்ணாடிக் கருவிகளை தயாரிப்பதில் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு கால சான்றிதழ் பயிற்சி படிப்பை அளிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 25 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி மாணவருக்கும் ரூ.120 மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது. **31.3.2006** வரை 53 தொகுதி மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர். 54 மற்றும் 55 வது தொகுதி மாணவர்கள் தற்போது பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். பயிற்சி முடிவுற்ற பின் மாணவர்கள் பல்வேறு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் எளிதாக வேலை வாய்ப்பு பெறுகின்றனர். சிலர், அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரிக்கும் தொழில் நிலையங்களை சொந்தமாக தொடங்கியுள்ளனர்.

### 2.4.3 அரசினர் தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி

இப்பயிற்சி நிலையத்தில் மூன்றாண்டு இயந்திரவியல் பட்டயப் படிப்பை கீழ்க்காணும் சிறப்பு பிரிவுகளுடன் வழங்குகிறது:

1. கருவி மற்றும் அச்சு பொறியியல்
2. குளிர் பதனம் மற்றும் காற்று பதனம்

இவ்விரு பிரிவுகளிலும், முறையே 30 மற்றும் 40 மாணவர்கள் ஆண்டு தோறும் சேர்க்கப்படுகின்றனர்.

### 2.4.4 கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்

இப்பயிலகத்தில், மூன்றாண்டு இயந்திரவியல் பட்டயப் படிப்பு சிறப்பு பிரிவான கருவி மற்றும் அச்சு பொறியியல் ஆகியவற்றுடன் கற்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் இதில் 30 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

## 2.5 ஒழுங்குமுறை நடவடிக்கைகள்

### 2.5.1 தரக்கட்டுப்பாட்டு ஆணைகளை அமலாக்குதல்

தொழில் வணிக இயக்ககத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆணை அமலாக்க மையம் 1981ம் ஆண்டு வீட்டு மின்உபகரணங்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை மற்றும் மின்கம்பி, உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் உபபொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகியவற்றை அமலாக்கம் செய்கிறது. முதல் ஆணையை மீறுபவர்களை 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்படி தண்டிக்கமுடியும். இரண்டாம் ஆணையில் குறிப்பிட்ட பொருட்கள் இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவன முத்திரை இல்லாமல் தயாரிப்பது அல்லது விற்பனை அல்லது விநியோகத்திற்காக சேமித்து வைப்பது ஆகியவற்றை தடை செய்கிறது. இவ்வாணையை மீறுவது இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவன சட்டத்தின்படி குற்றமாகும். மாவட்டங்களில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் இவ்வாணைகளை நடைமுறைபடுத்த “உரிய அலுவலர்”களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னையை பொறுத்தவரை இணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) அந்த அதிகாரம் படைத்த அலுவலர் ஆவார். 2005–2006 ஆம் ஆண்டில் முதல் ஆணையின்படி 2473 சாதனங்கள் பரிசோதனைக்கு சேகரிக்கப்பட்டன மற்றும் இரண்டாவது ஆணையின் படி 45 சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

### 2.5.2 சிறு மற்றும் துணை தொழில் நிறுவனங்களுக்கு தாமதமாக செலுத்தும் தொகை மீதான வட்டி சட்டம் 1993ஐ நடைமுறைப்படுத்துதல்

சிறு மற்றும் துணை தொழில் நிறுவனங்களுக்கு தாமதமாக செலுத்தும் தொகை மீதான வட்டி சட்டம் 1993ன் கீழ் தொழில் வசதியாக்கக் குழுக்கள் அமைக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் தொழில் வசதியாக்க குழுக்களை அமைத்துள்ளது. 2005–06ம் ஆண்டில் 30.6.2006 வரை ரூ.107 இலட்சம் தொகை கொண்ட 44 வழக்குகள் இக்குழுக்களின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன

## 2.6 தொழிற்பேட்டை

### 2.6.1 பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம்

இத்துறை விருத்தாச்சலத்தில் மண்பாண்டப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை ஒன்றை துவக்கியுள்ளது. இத்தொழிற்பேட்டையில் 64 தொழிற்கூடங்கள் உள்ளன. இங்குள்ள நிறுவனங்கள் குறைந்த மின்அழுத்த இன்சுலேட்டர்கள், சுகாதார பொருட்கள், கலைபொருட்கள், உயர் வெப்பம் தாங்கக்கூடிய செங்கற்கள் மற்றும் உயர் வெப்பம் தாங்கக்கூடிய பொருட்களை தயாரிக்கிறது. 2005–06ஆம் ஆண்டில் சேவைக் கட்டணமாக ரூ.17.6 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 2.6.2 மின் மற்றும் மின்னணுவியல் தொழிற்பேட்டைகள்

அரசு மின் மற்றும் மின்னணு தொழில்களுக்காக மட்டும் எட்டு தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இவற்றில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி) மற்றும் திருவள்ளூர் (காக்களூர்) மதுரை (கப்பலூர்) சேலம் (சூரமங்கலம்) கோயம்புத்தூர் (மாநகரம்) கிருஷ்ணகிரி (ஒசூர்) மற்றும் திருச்சி (துவாக்குடி) ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் உள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் 515 மனைகளும் 140 தொழிற்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தொழிற்பேட்டைகளில் ஒதுக்கப்பட்ட தொழிற்கூடங்கள் / மனைகளின் விவரம்**

| வ. எ | தொழிற்பேட்டை | மொத்தம் | | ஒதுக்கப்பட்டவை | | காலியாக உள்ளவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொழிற் கூடங்கள் | மேம் படுத்தப்பட்ட மனைகள் | தொழிற் கூடங்கள் | மேம் படுத்தப்பட்ட மனைகள் | தொழிற் கூடங்கள் | மேம் படுத்தப்பட்ட மனைகள் |
| 1 | டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னனு தொ.பேட்டை சென்னை | 105 | 6 | 104 | 6 | 1* | -- |
| 2 | செப்பனிட்ட மனை தொழிற்பேட்டை, பெருங்குடி | -- | 177 | -- | 175 | -- | 2* |
| 3 | மின்சார தொழிற்பேட்டை காக்களூர் | 14 | 46 | 11 | 44 | 3 | 2 |
| 4 | குறிப்பிட்ட தொழிலுக்கான மின் மற்றும் மின்னனு தொ.பேட்டை, ஒசூர் | 13 | 33 | 13 | 33 | -- | -- |
| 5 | குறிப்பிட்ட தொழிலுக்கான மின் மற்றும் மின்னனு தொ.பேட்டை, கோயம்புத்தூர் | -- | 30 | -- | 30 | -- | -- |
| 6 | குறிப்பிட்ட தொழிலுக்கான மின் மற்றும் மின்னனு தொ.பேட்டை, மதுரை | -- | 103 | -- | 31 | -- | 72** |
| 7 | குறிப்பிட்ட தொழிலுக்கான மின் மற்றும் மின்னனு தொ.பேட்டை, திருச்சிராப்பள்ளி | 8 | 68 | 8 | 68 | -- | -- |
| 8 | மின் மற்றும் மின்னனு தொ.பேட்டை, சேலம் | -- | 52 | -- | 51 | -- | 1 |

* வழக்கில் உள்ளது

** சிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்களுக்கு மாற்றிய / மாற்ற உத்தேசிக்கப்பட்டவை ஆகும்.

### 2.7 சிறுதொழில் வாரியம்

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு தலைமைச்செயலரை துணைத் தலைவராகவும் கொண்டு சிறுதொழில் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் உறுப்பினர்–செயலராக உள்ளார். பல்வேறு துறைகளின் அலுவலர்களும், சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் சங்க பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் உறுப்பினர் செயலர் என்ற முறையில் உறுப்பினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் கோரிக்கைகளை ஒருங்கிணைத்து நிகழ்ச்சிக் குறிப்புகளை தயாரித்து வாரியக் கூட்டத்தில் விவாதிக்க முன் வைப்பார். இவ்வாரியம் தனது பரிந்துரைகளை தக்க நடவடிக்கைக்காக அரசுக்கு பரிந்துரைக்கும்.

## 2.8 கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரம்

### 2.8.1 அனைத்திந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு

இந்திய சிறுதொழில் வளர்ச்சி ஆணையர், புதுதில்லி இதுவரை மூன்று அனைத்திந்திய அளவிலான சிறு தொழில் கணக்கெடுப்புகள் நடத்தியுள்ளார். முதல் கணக்கெடுப்பு 1972–73ம் ஆண்டுகளிலும், இரண்டாம் கணக்கெடுப்பு 1990–92ம் ஆண்டுகளிலும், மூன்றாம் கணக்கெடுப்பு 2002–03ம் ஆண்டுகளிலும் நடைபெற்றன.

மூன்றாம் அனைத்திந்திய கணக்கெடுப்பில், ஆய்வு செய்யப்பட்ட 3,07,217 பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களில், 1,79,385 நிறுவனங்கள் இயங்குபவையாகவும், 1,27,832 நிறுவனங்கள் மூடப்பட்டவையாகவும் கண்டறியப்பட்டன. மேலும், பதிவு செய்யப்படாத சிறுதொழில் நிறுவனங்களின் மாதிரி ஆய்வில் 877 கிராமங்கள் மற்றும் 935 நகரப் பகுதிகளில், 19,296 சிறுதொழில் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

### 2.8.2 மாதிரி ஆய்வு

ஒவ்வொரு அனைத்திந்திய கணக்கெடுப்புக்கிடையேயும், சிறுதொழில் வளர்ச்சி ஆணையர் அவர்களால் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விவரங்கள் நாளது வரை குறித்துக் கொள்ளப்படுகின்றன. கடைசியாக 2000–2001ம் ஆண்டு இத்தகைய மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.8.3 தொழில் உற்பத்தி குறியீடு

சிறுதொழில் வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் பொருட்டு, 1998ம் வருடத்திலிருந்து, சிறுதொழில் வளர்ச்சி ஆணையரால் மாதாந்திர உற்பத்தி விவரங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து சேகரிக்க, 1970ம் ஆண்டை அடிப்படைஆண்டாகக் கொண்ட தொழில் உற்பத்தி குறியீடு என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், பொருளாதார வளர்ச்சியின் முழுமையான மதிப்பீட்டில் தேசிய முக்கியத்துவம் அடைந்துள்ளது.

தற்போதுள்ள, தொழில் உற்பத்தி குறியீட்டினைக் கணக்கிட தொகுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதால், 2001–02 அடிப்படை ஆண்டையும் தொகுப்பையும் சிறுதொழில் வளர்ச்சி ஆணையர் மாற்றம் செய்துள்ளார்.

தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், இந்த புதிய தொகுப்பு 28 மாவட்டங்களில், 3366 சிறுதொழில் நிறுவனங்களையும், 185 உற்பத்திப் பொருட்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. விவரங்கள் சேகரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

### 2.9 பொருட்காட்சிகள்

2005–06ஆம் நிதியாண்டில் பொருட்காட்சிகளுக்கு செலவிட அரசு ரூ.3,34,860/–க்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துறை புதுடில்லியில் நடந்த 32வது இந்திய சுற்றுலா மற்றும் சுதந்திரதின வர்த்தகப் பொருட்காட்சி உட்பட 2005-06ஆம் ஆண்டில் 6 பொருட்காட்சிகளில் கலந்து கொண்டுள்ளது.

### 2.10 துறையால் செயற்படுத்தப்படும் முக்கியத் திட்டங்கள்

#### 2.10.1 பாரதப்பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டம்

அக்டோபர் 2, 1993 முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டம் குறைந்த அளவு படித்த ஏழைகளுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதை குறிப்பான குறிக்கோளாக கொண்டுள்ளது. அதிலிருந்து இத்திட்டம் மாநிலத்தில் வெற்றிகரமாக செயலாக்கப்பட்டு வருகிறது. குறைந்த கல்வித் தகுதி பெற்றுள்ள (8ஆம் வகுப்பு தேர்ச்சி) 18 முதல் 35 வயதுடைய இளைஞர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது. (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் / முன்னாள் இராணுவத்தினர் / ஊனமுற்றோர் மற்றும் மகளிர் ஆகியோருக்கு 1.4.1999 முதல் வயது வரம்பு 45) அரசு அங்கீகரிக்கப்பட்ட ஐடிஐ போன்ற நிறுவனங்களில் குறைந்தது ஆறு மாத கால பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.40 ஆயிரம் மற்றும் 3 ஆண்டுகள் ஒரே இடத்தில் வசித்து இருக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 22.5 விழுக்காடு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

2005–06ம் ஆண்டில் 24,773 பயனீட்டார்களுக்கு 85.41 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. 2006–07ம் ஆண்டில் 27,000 பயனாளிகளுக்கு உதவ திட்டமிடப்பட்டுள்ளது.

#### 2.10.2 தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகமானது மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 75 சதவீகிதம் வரை அல்லது ரூ.50.00 கோடி வரை இவற்றில் எது குறைந்த தொகையோ அதனை மத்திய அரசு தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 31.3.2006 வரை கீழ்க்கண்ட ஐந்து திட்டங்களான (1) வாகன உதிரி பாகம் குழுமம், சென்னை (2) பின்னலாடை குழுமம், திருப்பூர் (3) தானியம் மற்றும் பருப்பு அரைவை குழுமம், மதுரை (4) பம்பு மோட்டார் மற்றும் பவுண்டரி தொழில் குழுமம், கோவை (5) தோல் தொழில் குழுமம், ஆம்பூர் ஆகிவற்றிற்கு மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையாக ரூ.370.89 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ.19804.99 இலட்சத்தை தனது பங்களிப்பாக

இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த ஐந்து குழுமத் திட்டங்களும் பல்வேறு கட்ட நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளது.

### 2.10.3 தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

மத்திய அரசின் சிறு தொழில் அமைச்சகம் இத்திட்டத்தை குறு மற்றும் ஊரக தொழில்களுக்கு, குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில், தொழில் கட்டமைப்பு மேம்பாடு செய்யும் குறிப்பான நோக்கத்துடன் செயல்படுத்தி வருகிறது. ஒசூரில் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. கிண்டியில் செயலாக்கத்தில் உள்ளது. இது தவிர, மதுரை, கோயமுத்தூர் மற்றும் விருதுநகர் ஆகியவற்றிற்கான திட்டங்கள் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 2.10.4 அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டம்

விவசாயத்தையும், தொழிலையும் ஒருங்கிணைப்பு செய்து கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு விவசாயம் சார்ந்த மற்றும் உணவு பதப்படுத்துதல் தொழில்களை வளர்ப்பதற்காக திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

மாநில அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டத்தில் 30.6.2006 முடிய ரூ.839.99 கோடியில் 385 வட்டாரங்களில் 1,346 திட்டங்கள் தொடங்க அனுமதியளிக்கப்பட்டது. அதில் ரூ.260.32 கோடியில் 242 வட்டாரங்களில் 402 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கி 9,698 பெண்கள் உட்பட 14,084 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ரூ.112.03 கோடியில் 212 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்படவுள்ளது. மேலும், ரூ.153.99 கோடியில் 227 திட்டங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதி உதவி பெற விண்ணப்பித்துள்ளன. இது வரையில் ரூ.824.86 இலட்சங்கள் சிறப்பு மூலதனமானியம் மற்றும் குறைந்த மின்னழுத்த மானியங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.10.5 சிறு தொழில் நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம்

சிறு மற்றும் குறுந்தொழில் அலகுகளால் தொழில் நுட்ப மேம்பாடு, நவீனமயமாக்கல், தேசிய விளிம்பு நிதித்திட்டம், தேசிய சிறு தொழில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் கூட்டுக்கடன், கூட்டுக்கால கடன் திட்டம் மற்றும் கடன் உத்திரவாத நிதிக்குழுமத் திட்டம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட கடன்களின் மீதான வட்டி சுமையை குறைப்பதற்காக டிசம்பர் 2003ல் இத்திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு வாடிக்கையாளர்களின் வரவேற்பு குறிப்பிடத்தக்க வகையில் இல்லை. அரசு இத்திட்டத்தின் மீது விரிவான ஆய்வினை மேற்கொண்டு திட்டத்தின் அமலாக்கத்தில் இடையூறு இருப்பின் அதனை நீக்க ஆவன செய்யும்.

**2.10.6 தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்**

தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம், தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை தொழில் வணிக இயக்ககத்தின் மூலமும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை மூலமும் செயலாக்கி வருகிறது.

2001- 2002லிருந்து 2005–06ம் ஆண்டு வரை 1,35,000 என்ற இலக்கில் இதுவரை இத்துறை, 1,36,399 மகளிர் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளித்து மிகக் குறுந்தொழில் நிறுவனங்கள் தொடங்க உதவி உள்ளது. பயிற்சி பெற்றவர்களில் 74,965 பேர் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். 35,035 மகளிர் தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர்கள். 26,399 மகளிர் பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்பு திட்டத்தை சேர்ந்தவர்கள்.

இது தவிர, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி திட்டத்தின் கீழ் கணிணிமயமாக்கப்பட்ட இயந்திரங்களை இயக்குவதில் தொழில் திறனை மேம்படுத்த 1000 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1. மேலும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மூன்றாண்டு பட்டயப் பொறியியல் படிப்பு இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஒரு மாத கால பொது தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியை அளித்து அவர்கள் நவீன சாதனங்களான குளிர்பதன சாதனம், சலவை இயந்திரம் மற்றும் செல்போன்களை பழுதுபார்த்தல் ஆகிய மிகச் சிறு நிறுவனங்கள் தொடங்க உதவி உள்ளது. இத்திட்டம் இத்தகைய பட்டய கல்வி பயின்றவர்களின் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் மின் மின்னணு மற்றும் இயந்திரவியல் பிரிவுகளில் பயின்ற 119 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
2. மேலும் பட்டய கல்வி பயின்றவர்கள் / பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பிற குழுவினரை கருத்தில் கொண்டு அவர்கள் சிறிய அளவில் தொழில் தொடங்கும் வகையில் 78 இளைஞர்களுக்கு மூன்ற மாத திறன் மேம்பாட்டுத் திட்டம், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னையினரால் நடத்தப்பட்டது.
3. பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் சுய தொழில் துவங்கும் வகையில் இறுதியாண்டு பயிலும் 109 மாணவர்களுக்கு மூன்று நாட்கள் விழிப்புணர்வு முகாம் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சென்னை நடத்தியது.
4. சுயமாக தோல் தொழிற்சாலைகள் தொடங்கும் நோக்கமுடைய 31 நபர்களுக்கு தோல் பதனிடுதல் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல் குறித்த ஆறு வார தொழில் நுட்ப பயிற்சியளிக்கப்பட்டது.

5. சேலம், ஏற்காடு பகுதியில் பழங்குடியினருக்காக 2 மாதம் தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் கீழ் அந்துாரியம் பூக்களை பதப்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் 41 பழங்குடியினர் பயனடைந்தனர்.
6. பழங்கள் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதி வாய்ப்பினை தொழில் முனைவோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி 44 ஏற்றுமதி தொழில் நிறுவனங்களுக்கு 2 நாள் கருத்தரங்கு ஈரோட்டில் நடத்தப்பட்டது.

### 2.10.7 தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவி

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் ஜுலை 2005ல் அரசு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பாதுகாப்பு திட்டத்தை 6 மாதங்களுக்கு அறிவித்தது. பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சியை கருத்திற்கொண்டு ஒரு ஏக்கருக்கு ரூ.2,800 உதவி இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் 50,152 தேயிலை உற்பத்தியாளர்கள் உதவித் தொகை பெற்றுள்ளனர். மேலும், அரசு ஒரு ஏக்கருக்கு ரூ1,400 கூடுதல் உதவி தொகை அறிவித்தது. இதன் மூலம் 31.3.2006 வரை 43,296 தேயிலை உற்பத்தியாளர்கள் இக்கூடுதல் உதவி தொகையை பெற்றுள்ளனர்.

## 3. தொழிற் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள்

### 3.1 தேயிலை கூட்டுறவு சங்கங்கள்

நீலகிரி மாவட்டத்திலுள்ள 17 கூட்டுறவு சங்கங்கள் இத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 15 தயாரிப்பு சங்கங்கள் மற்ற இரண்டும் விற்பனை சங்கங்கள் ஆகும்.

### 3.1.1 தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகள்

இத்துறை நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாக கொண்ட 15 தேயிலை தொழிற் கூட்டுறவு தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. 2005–06ம் ஆண்டில் இத்தொழிற்சாலைகள் ரூ.2284.18 இலட்சம் மதிப்புடைய 475.87 இலட்சம் கிலோ பச்சை தேயிலையை கொள்முதல் செய்து ரூபாய் 4,289.16 இலட்சம் மதிப்புடைய 123.42 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்துள்ளன.

**தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகள்**

| வ.எண். | விவரங்கள் | கடந்த ஆண்டு |
|---|---|---|
| 1 | உறுப்பினர்களின் எண்ணிக்கை | **20,055** |
| 2 | பரப்பளவு(ஏக்கரில்) | **31,848** |
| 3 | கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலையின் அளவு (இலட்சம் கிலோவில்) | **475.87** |
| 4 | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு (இலட்சம் கிலோவில்) | **123.42** |
| 5 | தேயிலை விற்பனை(இலட்சம் கிலோவில்) | **123.78** |
| 6 | விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் மதிப்பு (இலட்சம் ரூபாயில்) | **4289.16** |

### 3.1.2 இண்ட்கோசர்வ்

1965ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு லிமிடெட் (இண்ட்கோசர்வ்) தற்போது இந்தியாவில் மிகப்பெரிய தேயிலை விற்பனை கூட்டுறவாக திகழ்கிறது. மற்ற பணிகள் போக, இந்நிறுவனம் பொது விநியோக முறை மற்றும் சில்லறை கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.2,835 இலட்சம் மதிப்புடைய 3,385 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலையை 2005–06ல் விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனம் 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.2,886 இலட்சத்திற்கு நேரடியாக மொத்த விற்பனை செய்து ரூ.294.44 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது.

### 3.1.3 தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் (டீ சர்வ்)

ஊட்டியில் தேயிலை மின்னனு ஏல விற்பனை மையத்தை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இச்சங்கம் ஏலங்கள் ஒளிவுமறைவற்றதாக நடைபெறவும், சரியான விலை பெறவும் உதவியுள்ளது. டீசர்வ் 28.2.2002 ஆம் ஆண்டு ஒரு கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டது. இச்சங்கம் மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு, தமிழக அரசு மத்திய மற்றும் தமிழ்நாடு விற்பனை வரியிலிருந்து 50 சதவீதம் வரிச்சலுகை அளித்துள்ளது. 2005–06ம் ஆண்டில் இச்சங்கத்தின் மூலம் ரூ.4,500.67 இலட்சம் மதிப்புடைய 127.96 மெ.டன் தேயிலை விற்கப்பட்டுள்ளது. இச்சங்கம் 2005–06ல் ரூ.0.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### 3.2 ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவு பொருட்கள்

சேலம் மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் (சேகோசர்வ்) தொழிற் கூட்டுறவு சங்கங்களில் மிகவும் வெற்றியடைந்த சங்கங்களுள் ஒன்றாக திகழ்கிறது. இச்சங்கத்தில் 370 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் பங்கு மூலதனம் ரூ.564.82 இலட்சம். இதில் அரசின் பங்கு ரூ.99.83 இலட்சம். தற்பொழுது இச்சங்கத்தில் 2.25 இலட்சம் மூட்டைகள் சேமித்து வைக்க கூடிய 10 சேமிப்பு கிடங்குகள் உள்ளன. இச்சங்கம் ஆரம்பித்தபிறகு மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள், குறிப்பாக சிறு உற்பத்தியாளர்கள், தங்களுடைய தயாரிப்பிற்கு நல்ல விலை பெறமுடிகிறது. 2005–06ம் ஆண்டில் இச்சங்கத்தின் மொத்த வியாபாரம் ரூ.23,029.00 இலட்சமாகும், அதன் உத்தேச இலாபம் ரூ.84.12 இலட்சம் ஆகும். சேகோசர்வ் மூலம் விற்பனை செய்யப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு அரசு பொது விற்பனை விதிப்பில் 2 சதவீதம் வரிச்சலுகை 7.5.2003லிருந்து அளிக்கப்பட்டுள்ளது.

### 3.3 கயிறு கூட்டுறவு

நம் மாநிலத்தில் தற்போது 68 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 10750 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் ரூ.279.83 இலட்சங்கள் ஆகும். இதில் அரசின் பங்கு ரூ.231.18 இலட்சங்கள் ஆகும். நடப்பாண்டில், ரூ.10.68 கோடி மதிப்புள்ள கயிறுப் பொருட்களை கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் விற்பனை செய்துள்ளன. 68 கயிறு சங்கங்களுள் 54 கயிறு திரிக்கும் சங்கங்கள், 8 நார் பிரிக்கும் சங்கங்கள், 4 விற்பனைச் சங்கங்கள், 1 சுருள் கயிறுச் சங்கம் மற்றும் 1 இரப்பர்பால் கயிறுச் சங்கம் ஆகியவை அடங்கும். நார் பிரித்தெடுத்தல், கயிறு திரித்தல் (கைகளால் & இயந்திரம் மூலம்), சுருள் கயிறு தயாரித்தல், கயிறு மிதியடி & தரைவிரிப்பு தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவையே இச்சங்கங்களின் பிரதான பணிகளாகும். சந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2005–06ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.34.77 இலட்சங்களை கயிறுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

### 3.4 சேவை கூட்டுறவு சங்கங்கள்

தொழில் வணிக இயக்ககம் 1983 முதல் 2000 வரை ஒரு புதிய முயற்சியாக 7 தொழிலாளர் சேவை கூட்டுறவு சங்கங்களை இம்மாநிலத்தில் அமைத்தது. தற்காலிக மற்றும் தொழில் திறன் பெறாத தொழிலாளர் ஆகியோரை ஒரு குழுவாக அமைத்து அவர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு பெற்று சட்டபூர்வமான அனைத்து சலுகைகளையும் பெற இச்சங்கங்கள் உதவுகின்றன. தற்போது 7 சங்கங்களும் 3,706 உறுப்பினர்களுடன் இம்மாநிலத்தில் செயல்பட்டுவருகின்றன. 2005-06 ஆம் ஆண்டில் இச்சங்கம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

### 3.5 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி

தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இத்துறை தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியை ஆரம்பித்துள்ளது. இவ்வங்கியை தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கு நபார்டு மறுநிதி திட்டத்தின் கீழ் கடன் வசதி வழங்கும் நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்துள்ளது. தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்குவதை தவிர, பொது மக்கள் மற்றும் சம்பளம் வாங்கும் பணியாளர்களுக்கு மற்றவகையான கடன்களை வழங்குகிறது. 2005–06ல் இவ்வங்கி ரூ. 237.18 கோடி நிதி திரட்டி உள்ளது. ரூ.188.01 கோடி கடன் வழங்கியுள்ளது. மற்றும் ரூ.2.97 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது.

### 3.6 கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

தொழில் வணிகத் துறை கூட்டுறவு முறையில் 11 தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தியுள்ளது. இவை சென்னை, கோயம்புத்தூர், சேலம், சிவகாசி, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி மற்றும்

திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் 8 செயல்பட்டு வருகின்றன. மூன்று [அண்ணா தொழிற்பேட்டை (கோயமுத்தூர்), பிரியதர்ஷினி தொழிற்பேட்டை (தென்காசி) மற்றும் சேலம் கிரானைட் தொழிற்பேட்டை (பகலப்பட்டி)] செயலாக்கத்தில் உள்ளன. இத் தொழிற்பேட்டைகளின் முக்கிய நோக்கம் சிறு தொழில் முனைவோர்களுக்கு மனைகள், தொழிற்கூடங்கள் மற்றும் பொது வசதிகள் ஆகியவற்றை அளிப்பதாகும். இக்கூட்டுறவு சங்கங்களில் 2,319 உறுப்பினர்கள் உள்ளனர்.

### 3.7 மற்ற தொழிற்கூட்டுறவு சங்கங்கள்

குறிப்பிட்ட துறை தொடர்பான சங்கங்கள் தவிர, ஏறக்குறைய 200 இதர கூட்டுறவு சங்கங்கள் தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் பல்வேறு வகையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. 31.3.2006 அன்று 41 சிறப்பு வகை சங்கங்கள் 40 ஆட்டோ மற்றும் வாடகை கார் சங்கங்கள், 30 அச்சு சங்கங்கள், 19 கைவினைப் பொருட் சங்கங்கள், 17 தையல் சங்கங்கள், 13 பாலிதீன் சங்கங்கள், 11 பொறியியல் சங்கங்கள், 8 உலோக சங்கங்கள், 7 செங்கல் தொழிற் சங்கங்கள், 6 தீப்பெட்டி சங்கங்கள், 5 நிலக்கரி சங்கங்கள் மற்றும் 3 தோல் பொருள் சங்கங்கள் ஆகியன மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பாலிதீன் மற்றும் தையல் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பெண்களே.

### தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் சிறுதொழில்களை வளர்க்கும் குறிப்பான நோக்கத்துடன் தமிழக அரசு நிறுவனமாக 1970ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சிட்கோ 43 தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. மேலும் 35 அரசு தொழிற்பேட்டைகளை முகவர் முறையில் பராமரிக்கிறது. 2005-06ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள தொழிற்கூடங்கள் / மனைகள் விற்பனையில் எய்திய சாதனை மற்றும் 2006-07 இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண். | விவரங்கள் | 2005-06 ஆம் ஆண்டில் எய்திய சாதனை | | 2006-07 ஆம் ஆண்டிற்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் இலட்சங்களில் | எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் இலட்சங்களில் |
| 1. | மேம்படுத்தப்பட்ட மனைகள். | 164 | 227.40 | 507 | 599.00 |
| 2. | மேம்படுத்தப்பட்ட மனைகளின் விற்பனை | 376 | 2030.41 | 644 | 1312.63 |
| 3. | தொழிற் கூடங்களின் விற்பனை | 22 | 125.43 | 60 | 300 |

## மூலப்பொருட்கள் விநியோகம்

இந்நிறுவனம் மூலப்பொருட்களை போட்டி விலையில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்குகிறது. சிட்கோ கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை விநியோகிக்கிறது :

1) இரும்பு மற்றும் எஃகு
2) மெழுகு
3) பொட்டாசியம் குளோரேட்
4) அச்சகக் காகிதம்

### 2005-06 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் மூலப்பொருட்கள் விநியோகத்தில் எய்திய சாதனை மற்றும் 2006-07க்கான இலக்கு.

**(ரூ. இலட்சத்தில்)**

| வரிசை எண். | விவரங்கள் | 2005-06 ஆம் ஆண்டில் எய்திய சாதனை | | 2006-07 ஆம் ஆண்டிற்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | மெ.டன். | மதிப்பு | மெ.டன். | மதிப்பு |
| 1. | இரும்பு மற்றும் எஃகு | 9146.099 | 2653.17 | 20,000.000 | 5580.00 |
| 2. | மெழுகு | 448.500 | 199.21 | 1500.000 | 739.50 |
| 3. | TNPL காகிதம் | 1647.739 | 697.97 | 2265.000 | 997.00 |
| 4. | பொட்டாசியம் குளோரேட் | 44.350 | 16.35 | 60.000 | 23.00 |

## விற்பனை உதவித் திட்டம்

விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் சிட்கோவில் பதிவு செய்து கொண்ட சிறுதொழில் நிறுவனங்களின் சார்பில் அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிட்கோ கலந்து கொண்டு பணி ஆணைகளை பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் **2856** அலகுகள் சிட்கோவில் பதிவு செய்து கொண்டுள்ளன. **2005–2006**ஆம் ஆண்டில் ரூபாய் **53.65** இலட்சங்கள் மதிப்புடைய சிறுதொழில் உற்பத்திப் பொருட்களான விளையாட்டு பொருட்கள், பரிசோதனைக்கூட உபகரணங்கள், குளோரினேட்டர்ஸ், பிளீச்சிங் பவுடர், தோல் பொருட்கள், பஞ்சு கழிவுப் பொருட்கள், விளம்பர பலகைகள் ஆகியன இத்திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படுகின்றன.

## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

முந்தைய ஆண்டு செயல்பாட்டுடன் ஒப்பிடப்பட்ட , 2005-06ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் 2006-07ஆம் ஆண்டிற்கான இலக்கு

(ரூ. இலட்சங்களில்)

| | 2002–03 தணிக்கை செய்யப்பட்டது | 2003–04 தணிக்கை செய்யப்பட்டது | 2004–05 தணிக்கை செய்யப்பட்டது | 2005–06 (உத்தேச மதிப்பீடு) | 2006–07 இலக்கு |
|---|---|---|---|---|---|
| மொத்த விற்பனை | 4283.00 | 4978.00 | 5421.00 | 6189.00 | 6000.00 |
| மொத்த உற்பத்தி | 4270.00 | 5119.00 | 5375.00 | 6040.00 | 6000.00 |
| நிகர இலாபம் | (-)240.08 | (-)90.07 | 9.74 | 48.00 | -- |

செய்து முடிக்கப்பட்ட பணிகள்

**2005-06 ஆம் ஆண்டு செய்து முடிக்கப்பட்ட பணிகள்**

(ரூ. இலட்சங்களில்)

| | | |
|---|---|---|
| 1) | வருடாந்திர விலை ஒப்பந்தம் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆர்டிஎஸ் கிரில்கள் உட்பட கம்பிப் பொருட்கள் | 3311.00 |
| 2) | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கம்பப் பெட்டிகள் | 108.00 |
| 3) | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வருடாந்திர விலை ஒப்பந்தம் மூலம் மின் கோபுர பாகங்களுக்கு முலாம் பூசுதல் | 310.00 |
| 4) | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு முலாம் பூசப்பட்ட மின்கோபுர பாகங்கள் | 245.00 |
| 5) | பாரத மிகுமின் நிறுவனம், திருச்சி | 30.00 |
| 6) | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம் | 19.00 |
| 7) | பவர்பின் சென்னை கார்ப்பரேட் அலுவலகத்தில் உள் அமைப்பு பணி | 52.00 |
| 8) | டுபிட்கோ தலைமை அலுவலகத்தில் அறைகலன்கள் மற்றும் தடுப்பு பணிகள் | 58.00 |
| 9) | காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு இரும்புக் கதவுகள், ஜன்னல்கள் ஆகியவற்றை வடிவமைத்து அளித்தல் (டி.ஆர்.டி.ஏ) | 120.00 |
| 10) | இந்திய தொழில் நுட்பக் கழகம், சென்னைக்கு கட்டில்கள் வழங்கியது | 38.00 |
| 11) | சென்னை மாநகராட்சிக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியது | 22.00 |
| 12) | சென்னை, கருவூல கணக்கு ஆணையர் அலுவலகத்திற்கு உள்ளலங்காரம் | 64.00 |
| 13) | பொது சுகாதார மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் நிலையங்களுக்கு அறைகலன்கள் | 50.60 |
| 14) | மக்கள் நல உதவி மையங்களுக்கு அறைகலன்கள் | 48.84 |
| 15) | ஆரம்பக் கல்வி இயக்குநரின் கரும்பலகை திட்டத்திற்கு அறைகலன் வழங்கியது | 287.00 |
| 16) | டி.என்.எம்.டி.சி சுகாதார மையங்களுக்கு அறைகலன்கள் | 49.00 |
| 17) | ஊரக வளர்ச்சி முகமை தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு இந்தியா மார்க் 2 பம்பு மற்றும் பாகங்கள் வழங்குதல் | 330.80 |
| 18) | திருவாளர்கள் டைட்டன் நிறுவனத்திற்கு கடிகாரங்கள் செய்தல் | 53.60 |

மாசுகட்டுப்பாடு விதிகளுக்கிணங்க டான்சி செயல்படுவதற்காக மேட்டூர் அணையிலுள்ள துத்தநாக முலாம் பூசும் நிறுவனத்தில் காற்று மாசுபடுதலை தடுக்கும் உபகரணங்களை நிறுவுவதற்காக ஒரு பகுதியாக ரூ.25 இலட்சம் சலுகை கடன் வழங்க அரசு உத்தேசித்துள்ளது. 2006–07ம் ஆண்டில் டான்சி நிறுவனத்தை நிதி சீரமைப்பு செய்து போட்டியிடும் திறன், உற்பத்தி திறன் மற்றும் பணிஆணைகளை மேம்படுத்த அரசு உதவி செய்யும்.

## ஐஎஸ்ஓ 9001: 2000 சான்றிதழ்

டான்சியின் கீழ்க்குறிப்பிட்ட அலகுகள் அவற்றின் உற்பத்தி பொருட்களுக்கு ஐஎஸ்ஓ 9001: 2000 சான்றிதழ் பெற்றுள்ளன.

1) டான்சி பம்பு அலகு, அம்பத்துார், சென்னை 58.
2) டான்சி கருவி மற்றும் இயந்திரவியல் பணி, திருச்சி
3) டான்சி உற்பத்தி அலகு, வேலூர்
4) டான்சி உற்பத்தி அலகு, பழனி, மற்றும்
5) டான்சி உற்பத்தி அலகு, இராஜபாளையம்

## தமிழ்நாடு பெயின்ட் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாப்பாப்)

இத்துணை நிறுவனம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1.4.1986 முதல் உற்பத்தியை தொடங்கியது. இந்நிறுவனம் சிவப்பு ஆக்ஸைடு பெயின்ட், சாலையில் குறியிடுவதற்கான ரப்பர் பெயின்ட் மற்றும் எனாமல் பெயின்ட்களை தயாரிக்கிறது. மாநில போக்குவரத்து நிறுவனங்கள் காவல் துறை, சென்னை மாநகராட்சி, சென்னை துறைமுகக் கழகம், நெடுஞ்சாலைத் துறை, சர்க்கரைக் கழகம் ஆகியன பெயின்ட்டை கொள்முதல் செய்கின்றன. மார்ச், 2006 வரை டாப்பாப் நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| உற்பத்தி | ரூ.191.52 இலட்சம் |
| விற்பனை | ரூ.191.71 இலட்சம் |

இந்நிறுவனம் ஐஎஸ்ஓ-9001:2000 தரச்சான்றிதழ் பெற்றுள்ளது.

* * *